தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மன்மத, புரட்டாசி 11, திருவள்ளுவர் ஆண்டு–2046

2015 செப்டம்பர் 28, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல."

விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருப்பாதங்களை இடைவிடாமல் வணங்குகிறவர்களுக்கு எங்கும் எப்பொழுதும் துன்பம் இல்லை.

1. வினாக்கள்–விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 355, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

355—

சிற்றுந்து

***43570—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2015 செப்டம்பர் 28

(அ) விளவங்கோடு தொகுதியிலுள்ள மார்த்தாண்டம் பேருந்து பணிமனையிலிருந்து மலைக் கிராமங்களுக்கு சிற்றுந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மார்த்தாண்டம் பகுதியிலிருந்து மலையோரக் கிராமங்களுக்கு போதிய அளவிற்குப் பேருந்து வசதி இருக்கின்ற காரணத்தினால், சிற்றுந்து இயக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு, கல்குளம் ஆகிய தாலுகாக்களில் மலையோரக் கிராமங்கள் அதிகம் உள்ளன. இங்கு பெரிய பேருந்துகள் இயக்க சிரமமாக உள்ளது. எனவே, விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி, கடையாலுமூடு பேரூராட்சி, நிரப்பு என்ற மலைக் கிராமத்திற்கு கடையாலுமூடு, ஆலஞ்சோலை மற்றும் கற்றுவா வழியாக மினி பஸ் இயக்க வேண்டுமென்று கோருகிறேன். இதுபோன்று பத்துகாணி, ஆறுகாணி, ஒரு நூறாம்வயல் வழியாக கீழேமண்ணடி, மேலேமண்ணடி, புளிமூட்டுகாலை மற்றும் சிறுகளத்துகாணி ஆகிய ஊர்களுக்கும், மேல்புறம், மேல்பாலை, மொட்டைகாளை, சூரன்குழி, இளஞ்சிறை வழியாக கண்ணுமாமூடு மற்றும் பனச்சமூடு, குளப்பாறை, அம்பலக்காலை, கோடிச்சுமூடு, மஞ்சாலமூடு, மாங்கோடு, கொற்றக்கோணம், பனச்சம்மோடு மற்றும் வெள்ளச்சிபாறை ஆகிய மலைக் கிராமங்களுக்கும் சிற்றுந்து இயக்க வேண்டும். மேல்புறம் அண்டுகோடு, பிலாவிளை மெதப்பங்கோடு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, ஒரு கேள்வி கேளுங்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: உரையை முடித்து விடுகிறேன். குடுக்கச்சிவிளை வழியாக அண்டுகோடு ஊருக்கு Circular Mini Bus இயக்க அரசு முன்வரவேண்டும். அதேபோல, தும்பாலி மற்றும் மலையடி போன்ற பகுதிகளில் உள்ள சாலைகளும் சிறிய சாலைகளாக இருப்பதால், அங்கு சிற்றுந்தை இயக்குவதுதான் சாத்தியமாக இருக்கும். இந்தப் பகுதிகளில் பேருந்துகள் இல்லாத காரணத்தால், சிற்றுந்து இயக்க அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கோதையார், பத்துகாணி, ஆறுகாணி மற்றும் குற்றியார் போன்ற மலையோரக் கிராமங்களுக்கு 9 பேருந்துகளின்மூலம் 42 நடைகள் இயக்கப்படுகின்றன. அதனுடைய பயணியினுடைய அடர்வு 58 சதவீதத்திலிருந்து 60 சதவீதம் வரைதான் இருக்கின்றது. பயணிகள் அதிகமாக இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இயக்கப்படும் பேருந்துகள் மிகவும் பராமரிப்பு இல்லாத நிலையில் இருந்துகொண்டிருக்கின்றன. சமீபகாலத்தில்கூட ஒரு மலைக் கிராமத்தின் வழியாகச் சென்றுகொண்டிருந்த பேருந்து ஒன்று, பிரேக் இல்லாமல் போனதால், அந்தப் பகுதியில் ஒரு பள்ளி மாணவி வெளியில் விழுந்து, மரணித்த சூழ்நிலையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதற்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதியுதவி கொடுத்திருந்தார். அதுபோல, spare parts-ஐ வழங்குவது ஒரு பெரிய பிரச்சினையாக இருந்து வருகிறது. பேருந்துகளுக்கு spare parts வழங்குவது மற்றும் பழைய பேருந்துகளை நீக்கிவிட்டு, TN 57, 59, 49, 45, 23, 32 என்று பதிவில் வரக்கூடிய பல்வேறு பேருந்துகளில் ** இதில் மாற்றங்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கொண்டுவந்து, இந்தப் பகுதிகளில் இயங்கக்கூடிய பேருந்துகளை மாற்றித் தரும் விதத்தில், கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கக்கூடிய பிற மாவட்டப் பதிவு பேருந்துகளை மாற்றி TN 74 பதிவு கொண்ட புதிய பேருந்துகளை இயக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, நீங்கள் துணைக் கேள்வியைக் கேளுங்கள். நான் உங்களை விவாதம் செய்யச் சொல்லவில்லை. துணைக் கேள்விதான் கேட்கச் சொன்னேன். துணைக் கேள்வியைக் கேளுங்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாற்றத்தோடு, புதிய பேருந்துகளை இயக்கிட வேண்டும். விளாத்துறை மற்றும் மலையடி போன்ற கிராமங்களில் உள்ள சாலைகள் சிறிய சாலைகளாக இருந்து வருகின்றன. அங்கு ஏற்கெனவே பேருந்துகள் இல்லை. ஆனால், தற்போது கடும் முயற்சி எடுத்து, சில சாலைகள் சரிசெய்யப்பட்டிருக்கின்றன. அதன்வாயிலாக சிற்றுந்தை இயக்கக்கூடிய வாய்ப்புதான் அங்கு இருக்கிறது. ஏனென்றால், அங்கு நிறைய இடங்களில் மரங்கள் சிறியதாக இருக்கின்றன. மரங்களை வெட்டவேண்டுமென்று கேட்கும்போது, பொதுப் பணித் துறை மற்றும் வருவாய்த் துறை ஏற்றுக்கொள்வதில்லை. அதில் நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. ஆகையால், அங்கு நிறைய இடங்களில் சிற்றுந்து செல்வதற்குத்தான் வாய்ப்பு இருக்கிறது. எனவே, வனப் பாதுகாப்பு உள்ள இடங்களில் சிற்றுந்து செல்வதற்கு வசதியாக இருக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் சொன்னாலும் கேட்க மாட்டேன் என்கிறீர்கள். (குறுக்கீடு) இல்லை; ஒரு கேள்விக்கு இவ்வளவு நேரம் எடுத்துக்கொண்டால் எப்படி நான் கேள்வி நேரத்தை நடத்துவது? (குறுக்கீடு) நீங்கள் இப்படிச் செய்தால் எப்படி? கேள்வியை முடியுங்கள்.*

முற்பகல் 10–05

திருமதி எஸ். விஜயதரணி: *எனவே, இந்த மரங்களையெல்லாம் பாதுகாக்க வேண்டிய சூழ்நிலையில், அந்தச் சாலைகளின் வழியாகச் சிற்றுந்தை இயக்க ஓர் ஆய்வு செய்து, என்னுடைய தொகுதியில் சிற்றுந்துகளை அதிகமாகக் கொண்டுவர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத்*

2015 செப்டம்பர் 28]

தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டைச் சொல்லிப் பேசியிருக்கின்றார். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். ** என்று சொல்லியிருக்கின்றார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *நான் பேசியது உட்பட நீக்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியது உட்பட, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைச் சொல்லிக்கொண்டிருக்கின்றார். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியில் 24 புதிய பேருந்துகள் இயக்கப்பட்டிருக்கின்றன. (குறுக்கீடு) முழு விவரமும் என்னிடத்தில் இருக்கின்றது.* S.E.T.C.–*ல் 17 பேருந்துகள் இயக்கப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், 2006-2011 வரையிலான 5 ஆண்டுக் காலத்தில், அங்கே* break down *ஆன பேருந்துகளின் எண்ணிக்கை 2,979 ஆகும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், நல்ல நிருவாகத்தின் காரணமாக, 363 பேருந்துகள் மட்டும்தான்* break down *ஆனது. அந்த 2,979 பேருந்துகளினால் கிட்டத்தட்ட 6 இலட்சத்து 6 ஆயிரத்து 620 கிலோ மீட்டர் அளவுக்கு* loss *ஆனது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஒரு இலட்சத்து 43 ஆயிரத்து 460 கிலோ மீட்டர் அளவுக்கு மட்டும்தான்* break down *ஆல்* loss *ஆனது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு முதலில் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[2015 செப்டம்பர் 28

மாண்புமிகு உறுப்பினர் கோரிய அந்த மலைப் பகுதியில் இப்போது பெரிய பேருந்துகள் செல்கின்ற அளவுக்கு சாலை வசதிகள் இருக்கின்றன. அதைத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன்; அங்கே 9 பேருந்துகள் 42 நடைகள் இயக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதுவும், 55 சதவிகிதம்தான் பயணிகளினுடைய அடர்வு இருந்துகொண்டிருக்கின்றது. மக்களுடைய தேவை அறிந்து செயல்படுகின்ற அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி தேவை இருக்கின்ற காலத்தில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதைப் பரிசீலித்து முடிவெடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை சட்டமன்றப் பேரவைத் தொகுதிக்குட்பட்டிருக்கக்கூடிய வால்பாறை முழுக்க முழுக்க மலைப் பகுதியாகும். 6 மாத காலம் கடுமையான மழை இருக்கின்ற காரணத்தினால், மலைப் பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய மக்களுக்கு அங்கு இயங்கக்கூடிய பேருந்துகள் போதாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், கூடுதலான பேருந்துகளை இயக்கவும், பேருந்து போக்குவரத்து வசதி இல்லாத இடங்களுக்கு புதிய சிற்றுந்துகளை இயக்குவதற்குமான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா எனத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய வால்பாறை பகுதிக்கு, போதிய அளவிற்குப் பேருந்து வசதி இருக்கின்றது. அங்கே 60 சதவிகிதம் அளவுக்குத்தான் இதுகாறும் பயணிகளினுடைய அடர்வு இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு ஏதாவது ஒரு பகுதிக்கு புதிய பேருந்து வேண்டுமென்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, அதை

2015 செப்டம்பர் 28]

இயக்குவதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பூர் தொகுதி, பார்வதி நகரிலிருந்து எம்.ஆர். நகர் வழியாக பெரம்பூர் இரயில் நிலையத்திற்கும், பார்வதி நகரிலிருந்து, இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, எழில்நகர், கொருக்குப்பேட்டை வழியாக, திருவொற்றியூருக்கும் சிற்றுந்துகள் விடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். ஏற்கெனவே மாநகரத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் முதன்முதலாக 100 மினி பேருந்துகளை, சிறிய பேருந்துகளைக் கொண்டுவந்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையைப் பரிசீலித்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக்கொண்டு செல்லப்பட்டு, அந்தப் பகுதியில் இயக்குவதற்குண்டான ஏற்பாடு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. இரா. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டு மக்கள் நலம் பெறவும், வளம் பெறவும் நாளும் உழைக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

குறிஞ்சிப்பாடி தொகுதிக்குட்பட்ட, குறிஞ்சிப்பாடி, வடலூர், குள்ளஞ்சாவடி ஆகிய 51 ஊராட்சிகளை உள்ளடக்கிய பகுதிகளில் வசிக்கிற பொது மக்கள் பயன்பெறுகிற வகையிலே, சிற்றுந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக்கொள்வதெல்லாம், இப்போது மாநகரப் பகுதியிலே புதிய சிறிய பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மற்ற புறநகர்ப் பகுதிகளுக்கும் அது தேவை என்பது மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். இதுகுறித்து அரசு கொள்கை முடிவு எடுக்க வேண்டுமென்ற காரணத்தினால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 356, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

356—

நீதிமன்றம்

***43466 திரு. இரா. அண்ணாதுரை:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் மகளிர் விரைவு நீதிமன்றம் மற்றும் கூடுதலாக ஒரு குடும்பநல நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.*